# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா.செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.CP.3423/F/2024**

திரு S. வினோத்குமார் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
நன்னிலம் - 610 105, திருவாரூர் மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 24.11.2023 |
| மனுதாரரின் புகார் (CP) மனு நாள் | 20.07.2024 |

****

## ஆணை

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு மனுதாரர் திரு S. வினோத்குமார் என்பவர் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீடு நடைமுறைகள்) விதிகள், 2012 விதி 7-ன்கீழ் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்பது அவசியமாகிறது. இருப்பினும் மனுதாரர் இவ்வாணையத்தின் அழைப்பாணையைப் பெற்றுக் கொண்டும், இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவரது வருகையின்மையை இவ்வாணையம் பதிவு செய்கிறது. பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு ஜி. பிச்சைமுத்து, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், நன்னிலம், திருவாரூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் ஊராட்சி ஒன்றிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அகரதிருமாளம் ஊராட்சியின் கிராம நிர்வாகம் சார்ந்த கோப்புகள் சட்டத்தின் விதிமுறைகளின்படி முறையாக பராமரிக்கப்படுகிறதா அவைகளில் என்னென்ன பதிவேடுகள் பராமரிக்கப்ப்டுகிறது என்பது பற்றிய முழு விவரம், கிராம சபை கூட்டங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளில் வருடத்திற்கு எத்தனை முறை

நடந்துள்ளது அதில் பங்கு பெற்ற நபர்களின் விவரம், அவற்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பற்றிய விவரம், ஊராட்சி மன்றத்தில் எத்தனை துப்புரவு பணியாளர்கள் பணிசெய்கிறார்கள் என்பது பற்றிய முழு விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 45 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 18(1)-ன் கீழான புகார் மனுவை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் புகார் மனு இன்று (16.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ந.க.எண்.3995/2023/அ5 நாள் 02.02.2024 தேதியிட்டு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தில் தாக்கல் செய்தார். ஆணையம் அதனை கவனமுடன் பரிசீலனை செய்கையில், பொதுத்தகவல் அலுவலரால் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் போதுமானது எனக் கருதி, மனுதாரரின் புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.CP. 3423/F/2024</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
நன்னிலம் - 610 105, திருவாரூர் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.CP. 3423/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு S. வினோத்குமார், த/பெ. சந்திரசேகரன்,
எண்.242/1, வீராவாடி, அகரத்திருமானளம் (ஊ),
நன்னிலம் (வ), திருவாரூர் மாவட்டம் - 609 503.

Copy to: File
SNPS / 21.04.2025